2012 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு மத்திய–மாநில அரசு திட்டம் மற்றும் மாநில அரசு திட்டத்தின்கீழ் இலவச வீடுகள் கட்டி வழங்கப்பட்டு வருகின்றன. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், ரூபாய் 22.12 கோடி செலவில், 2,949 வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய 29 ஊராட்சிகளில் ஆலங்காடு, உப்பூர், ஜாம்புவானோடை, தில்லைவிளாகம், தொண்டியக்காடு, கற்பகநாதபுரம், விளாங்காடு, கோயிலூர், தம்பிக்கோட்டை கிழக்கு ஆகிய ஊராட்சிகள் மிகப் பெரிய அளவில் மீனவர்கள் வாழக்கூடிய பகுதிகளாகும். ஆகவே, அந்தப் பகுதிகளில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் ஏற்படக்கூடிய புயல், வெள்ளக் காலங்களில் அந்த மீனவர்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்த வகையில் அங்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

விளையாட்டு அரங்கம்

***3097—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மதுரவாயல் தொகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) விரிவடைந்துவரும் மிகப் பெரிய நகரமான சென்னையின் புறநகர் பகுதியான திருவள்ளூர் மாவட்டத்தில், நேரு உள்விளையாட்டு அரங்கம் போன்றோ அல்லது நேரு விளையாட்டு அரங்கம் போன்றோ, பன்முக விளையாட்டுகளுக்காக வாலிபர்கள், மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய அளவில் ஒரு அரங்கத்தை உருவாக்குவது, அதாவது விஷன் 2023 இல் குறிப்பிட்டுள்ளபடி,* Sports activities *இல் கூடுதலாக மாணவர்களை ஈடுபடுத்துவது பயனுள்ளதாக இருக்கும். எனவே, தற்போது செயற்குறிப்பு இல்லையென்றாலும்கூட ஒரு கருத்துருவாக்கம் செய்து, அரசு* Stadium *கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2012 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், ஒரு உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் இவையெல்லாம் உருவாக்கப்பட வேண்டுமென்பது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையிலே, இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் இடம் தேர்வு செய்து, இந்த மூன்று பணிகளுக்கும் ஏற்பாடுகள் செய்து பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற திருவள்ளூர் மாவட்டத்திலும் இப்போது உள் விளையாட்டு அரங்கம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான ஆக்கபூர்வமான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மாவட்ட தலைநகரங்களில் இந்த உள் கட்டமைப்புகளெல்லாம் முடிந்த பிறகு, எதிர்காலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களிலெல்லாம் இதுபோன்ற விளையாட்டு அரங்கங்கள் அமைக்க வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் கொள்கையாக இருக்கிறது. எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அம்மா அவர்களின் அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

90—

அன்னதானத் திட்டம்

***7861—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—